*KALAM International Research Journal*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*
*16 (2), 2023*

# இந்துசமய வழிகாட்டலில் சூழலியல் பாதுகாப்பும் நிலைபேறான அபிவிருத்தியும் - ஒரு மெய்யியல் நோக்கு

**மாரிமுத்து பிரகாஷன்**

மெய்யியல் மற்றும் விழுமியக் கற்கைகள் துறை
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம் - இலங்கை
Correspondence: prahasankm@esn.ac.lk

**ஆய்வுச்சுருக்கம்**

சமயம் என்பது மனித குலத்தை ஒன்றிணைத்து நிலைப்படுத்தி நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதற்காக நம்பிக்கையினை முன்நிலைப்படுத்தி அறிவார்ந்தமாக உருவாக்கப்பட்ட வாழ்வியல் வழிகாட்டல் முறையாகும். பௌதீத அதீதமான கடவுளை முன்நிலைப்படுத்தி பௌதீகமான உலகில் மனிதர்கள் செயற்பட வேண்டிய முறைகள் இங்கு ஒழுக்க நெறிகளாக அமைக்கப்பட்டுள்ளன. இயற்கையுடன் இசைந்த வாழ்க்கை என்பது இவற்றில் முன்நிலைப்படுத்தப்படுகின்ற ஒரு சிந்தனையாக உள்ளது. சமகாலத்தில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்ற நிலைபேறான அபிவிருத்தியின் கூறுகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பும், சுற்றுச்சூழல் நீதியும் பிரதானமானவையாக அமைந்துள்ளன. மனித செயற்பாடுகள் காரணமாக பாதிப்பிற்குள்ளாகிக்கொண்டிருக்கும் சூழலை பாதுகாப்பதற்காக உலகலாவிய ரீதியில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுக்கொண்டுள்ளன. நாடுகளிடையிலான ஒத்துழைப்பு, சர்வதேச உடன்படிக்கைகள், சர்வதேச பிரகடனங்கள், நிறுவனங்களின் உருவாக்கம் என இவை மிகப் பிரமாண்டமானவையாக அமைந்துள்ளன. ஆனால் இந்தியாவில் இயற்கையுடன் இணைந்ததாக மக்களை நெறிப்படுத்தி வாழ்வியல் வழிகாட்டல்களை வழங்குபவையாக தோற்றம் பெற்ற சமயங்கள் இயற்கை பாதுகாப்பினை மக்களது அன்றாட வாழ்வுடன் இணைந்த எளிமையான ஒன்றாக அணுகியுள்ளன. இந்த வழிகாட்டல்களை தெளிவாக அறிந்துகொள்வதும், தவறாது பின்பற்றுவதும் இயற்கை பாதுகாப்பிற்கும், நிலைபேறான அபிவிருத்திக்கும் அவசியமானதாகவும், போதுமானதாகவும் அமைந்துள்ளன. இந்நிலையிலேயே இந்த ஆய்வுக்கட்டுரையானது பண்புசார்ந்த ஆய்வாக முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளைப் பயன்படுத்தி இயற்கைப் பாதுகாப்பிற்கும், நிலைபேறான அபிவிருத்திக்கும் இந்துசமயத்தின் அறிவு எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்ற தேடலை மேற்கொள்வதாக அமைந்துள்ளது. இதன் ஊடாக இந்து தத்துவங்களில் இயற்கை பாதுகாப்பு, நிலைபேறான அவிவிருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்ட சிந்தனைகள் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன? இயற்கை பாதுகாப்புத் தொடர்பாக அண்மைக்காலங்களில் இந்துசமய நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் எவை? சமகால சூழலியல் பாதுகாப்புச் செயற்பாடுகளில் இந்து சமய வழிகாட்டல்கள் எவ்வாறு துணைகொள்ளப்பட முடியும்? முதலான வினாக்களுக்கான விடைகளைக் கண்டறிவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் ஊடாக இந்துசமய நூல்களில் இயற்கைபாதுகாப்பு தொடர்பான உயர்வான வழிகாட்டல்கள் உள்ளமை கண்டறிந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள்**: இந்து மெய்யியல், இந்து சமயம், சூழலியல் பாதுகாப்பு, சூழலியல் நீதி, நிலைபேறான அபிவிருத்தி

## ஆய்வு அறிமுகம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலைபேறான அபிவிருத்தி என்ற விடயங்கள் சமகால அரசியல், சமூக, பொருளாதார கலந்துரையாடல்களில் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் கொண்டவையாக அமைந்துள்ளன. மிகச் சிறந்த உதாரணமாக 2030ஆம் ஆண்டிற்கு முன்னர் அடைந்துகொள்ளப்பட வேண்டியவை என்று பதினேழு இலக்குகள் ஐக்கிய நாடுகள் சபையினால் 'நிலையான அபிவிருத்தி இலக்குகள்' (Sustainable Development Goals) என்று நிர்ணயிக்கப்பட்டு 195 நாடுகளினால் 2015ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இலக்குகளில் பன்னிரெண்டாவதான நிலைபேறான அபிவிருத்திக்காக பொறுப்புடனனான நுகர்வு மற்றும் உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபடுதல், பதின்மூன்றாவதான காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை தடுக்க அவசர நடவடிக்கைகளை எடுத்தல், பதின்நான்காவதான கடல்வளத்தை பொறுப்புணர்வுடன் நீண்டகால நோக்கில் பயன்படுத்துதல், பதினைந்தாவதான நில வளப்பாதுகாப்புடன் தொடர்புடையதாக காடுகளை பாதுகாத்தல், நிலம் தரிசாவதனை தடுத்தல், உயிர்ப்பல்வகைமை இழப்பை தடுத்தல் என்பவை சூழலியல் பாதுகாப்புடன் நேரடியான தொடர்பினைக் கொண்டவையாக உள்ளன (DESA, 2019: 23).

இந்த இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அணுகுமுறைகளும், நிகழ்ச்சித்திட்டங்களும் வகுக்கப்பட்டு பெரும் பொருட்செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவற்றில் சர்வதேச கூட்டுறவும் செயற்பாடுகளும், அரசுகளின் கொள்கைவகுப்புக்களும் செயற்பாடுகளும், அரசசார்பற்ற நிறுவனங்களது பங்களிப்புக்கள், தனிநபர்கள், குழுக்கள் என பல தரப்புக்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம் முயற்சிகளில் வளர்ச்சியடைந்த மேற்கத்தேய நாடுகளே மும்முரமாக செயற்படுபவையாக உள்ளன. அதேவேளையில் இவர்கள் பெரும்பான்மையாக பின்பற்றும் சமயங்களில் மனிதன் அனைத்து படைப்புக்களிலும் உயர்வானவனாகவும், இயற்கை அவனுடைய நுகர்வுக்கானது என்ற கற்பிதங்கள் உள்ளன. அதுபோல மேலைத்தேய மெய்யியலில் 1970ஆம் ஆண்டு வரையிலும் இயற்கையும் மனிதனும் தனித்தனியான கூறுகளாகவும் மனிதனால் கட்டுப்படுத்தி நுகர்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய ஒன்றாகவே இயற்கை உள்ளது என்ற நிலைப்பாடு பேணப்பட்டுள்ளது. இவ்வாறு இயற்கையின் அனைத்து கூறுகளிலும் மனிதனே முதன்மையானவன், இயற்கை மனிதனுடைய நுகர்வுக்காகவே உள்ளது, மனித தேவைக்கு பயன்படும் தன்மையினைக் கொண்டே இயற்கை பெறுமதியுடையதாகின்றது என்ற மானுடமையவாத சிந்தனையே அனைத்து சூழலியல் பிரச்சினைகளுக்கும் காரணமாயுள்ளது. இதனாலேயே பொதுவாக இயற்கைதொடர்பில் மனிதர்களது மனப்பாங்கு நியாயமானதாக இல்லை என்று குறிப்பிடப்படுகின்றது (Brennan, Lo, 2014: 7). இந்நிலையிலேயே மோசமான சூழலியல் பிரச்சினைகளை எதிர்கொண்ட பின்னர் மேலைத்தேய நாடுகள் இவ்வாறான உடன்படிக்கைகளையும், இலக்குகளையும் நிர்ணயித்து செயற்படுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

தற்போது இவ்வுலகம் எதிர்கொண்டுள்ளமையினைப்போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டிராத, இயற்கை வளங்கள் மனிதர்களுக்கு அபரிமிதமான வகையில் கிடைப்பனவாக இருந்த புராதன காலத்திலேயே மனிதன் இயற்கையின் ஒரு அங்கமே என்ற புரிதலுடன் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையே நிலையான மகிழ்ச்சியை தரும் என்றும் அதற்கான வழிகாட்டல்களை வழங்கியவையாக இந்து சமய புனித நூல்கள் அமைந்துள்ளன. பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாக உள்ளன, ஒன்றில் ஒன்று தங்கியுள்ளவையாக உள்ளன என்ற உண்மையினை போதிப்பதாக உள்ளன. இயற்கை நட்புறவான இந்து சமயம் நுகர்வுக்கலாசாரத்தை கட்டுப்படுத்துவதாக, குறைவான வளப்பயன்பாட்டையும், எளிமையான வாழ்க்கை முறையையும் ஊக்குவிப்பதாக, சிக்கன மனப்பான்மையினை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. இதன் காரணமாகவே பொதுவாக மேலைத்தேய நாடுகளில் வாழ்க்கைத்தர அபிவிருத்தியுடன் இறைச்சி உணவு நுகர்வுவீதம் அதிகரிப்பதாக உள்ள அதேவேளையில் இந்தியாவில் அவ்வாறு இல்லை என்பதனை பல்வேறு ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன (Ferry, 2020: 02). இதற்கு இந்து சமயவாழ்வியல் வழிகாட்டல்கள் அகிம்சை, கொல்லாமையுடன் தொடர்புடையதாக இருப்பதும், பல்வேறு சமய அனுஸ்டானங்கள் தாவர உணவு உட்கொள்வதனை ஊக்குவிப்பதும் காரணமாக உள்ளன. உலகின் மூன்றாவது மிகப்பெரிய மதமாக பின்பற்றப்படுகின்ற இந்துசமயம் உலக சனத்தொகையில் மிகப்பெரிய மக்கள் தொகையினரது வாழ்வியல் வழிகாட்டியாக உள்ளது. இப்போதனைகளை தெளிவாக அறிந்துகொள்வதும்,

பின்பற்றுவதும் சூழலியல் பாதுகாப்பிற்கும், நிலைபேறான அபிவிருத்திக்கும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் ஊடாக எதிர்பார்க்கும் நன்மைகளை விட அதிகரித்த நல்விளைவுகளை தரக்கூடியவையாகும். ஏனெனில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பின்பற்றப்படவேண்டியதாக முன்வைக்கப்பட்டுள்ள அணுகுமுறைகளில் பல இந்து சமயம் இயற்கைப் பாதுகாப்பு தொடர்பாக முன்வைக்கும் அடிப்படைப் போதனைகளுடன் தொடர்புடையவையாக அமைந்துள்ளன.

## ஆய்வுப் பிரச்சினை

இவ்வுலக இயக்கத்தில் விஞ்ஞான வளர்ச்சி, சமயவழிகாட்டல்கள் என்பவை இன்றியமையாதவையாக உள்ளன. சமயங்கள் பொதுவாக பௌதீக அதீதத்தை மையமாகக் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் பௌதீக உலகில் மனிதர்களது ஒழுக்க வாழ்வினை நெறிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. விஞ்ஞானத்தின் வளர்ச்சியுடன் மனித நாகரீகமும் எழுச்சிபெற்றுள்ள அதேவேளையில் பல்வேறு சீர்கேடுகளுக்கும் காரணமாக அமைந்துள்ளது. மனித குலம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் அனைத்தையும் விஞ்ஞானத்தின் துணைகொண்டு தீர்த்துவிட முடியாது. இந்நிலையிலேயே விஞ்ஞான வளர்ச்சியினால் உருவாக்கப்பட்ட சூழலியல் பிரச்சினைகளுக்கு தீர்வாக மனித ஆழ்மனதில் பதிந்து அவர்களது நடத்தையினை கட்டுப்படுத்துவதாக உள்ள சமய போதனைகள் பிரயோகிக்கப்பட முடியாதா? என்ற பிரச்சினை எழுகின்றது. சமயபோதனைகள் ஆன்மீக முன்னேற்றத்திற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற பின்னணியில் சர்வதேசத்தன்மை கொண்ட பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் அவை உள்ளடக்கியுள்ளன என்ற எடுகோளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வின் நோக்கம், ஆய்வு வினாக்கள்

இந்து சமயத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் புராதன ஞானத்தை சர்வதேசத் தன்மைகொண்டதாக உள்ள சமகால சூழலியல் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு பிரயோகிப்பதற்குள்ள வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. இதன்பொருட்டு இந்துசமய வழிகாட்டலானது சூழலியல் பாதுகாப்புக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கும் எவ்வாறு துணையாக அமையும்? என்ற பிரதான வினாவினை மையமாகக் கொண்டு புராதன இந்து தத்துவங்களில் இயற்கை பாதுகாப்பு எவ்வாறு முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது?, இயற்கை பாதுகாப்பினை இலக்காகக் கொண்டு எத்தகைய வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன?, நிலைபேறான அவிவிருத்தி என்பது எவ்வாறு விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது? அதனை அடைவதற்காக எத்தகைய வழிமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன? சமகால சூழலியல் பாதுகாப்புச் செயற்பாடுகளில் இவை எவ்வாறு துணைகொள்ளப்பட முடியும்? முதலான வினாக்கள் கட்டமைக்கப்பட்டு அவற்றிற்குரிய விடையினை கண்டறியும் முயற்சியாக இந்த ஆய்வு முன்நகர்த்தப்பட்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

முதலாம்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு பண்பு சார்ந்ததாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விமர்சன அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை என்ற விசேடத்துவமான அணுகுமுறைகளும் இங்கு பிரயோகிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் முதலானவை முதலாம்நிலைத் தரவுகளாக அமைகின்றன. இந்துசமய புனித நூல்களில் இயற்கை பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் எத்தகைய போதனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது நுணுகி ஆராயப்பட்டுள்ளதுடன் அவை சமகாலத்தில் பின்பற்றப்படுவதற்குரிய பொருத்தப்பாடு தொடர்பில் விமர்சனரீதியான அணுகுமுறையும், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் அவை கொண்டுள்ள தொடர்புகள் பற்றி ஒப்பீட்டு ரீதியான அணுகுமுறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பில் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அவை இந்த ஆய்வுக்குரிய இரண்டாம் நிலைத்தரவுகளாக அமைந்துள்ளன.

## இந்து சமயத்தில் சூழலியல் சிந்தனைகளும் நிலைபேறான அபிவிருத்தியும்

இந்து சமயத்தில் சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கும் சிந்தனைகளை வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், தர்மசாஸ்திரங்கள் முதலானவற்றில் காணக்கூடியதாக உள்ளது. இயற்கையுடன் இசைந்த வாழ்க்கைமுறையாக தோற்றம்பெற்ற இந்து சமயத்தின் அடிப்படையான புனித நூல்களாக இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேத நூல்களும் அமைகின்றன. இவற்றில் இயற்கை புனிதமானது, பேணிப்பாதுகாக்கப்பட வேண்டியது என்ற கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன. இயற்கையை பல்வேறு வடிவங்களில் கடவுளாக உருவகப்படுத்தி வழிபடுகின்ற மரபும் இதனை அடிப்படையாகக் கொண்டே தோன்றம்பெற்றுள்ளது. இயற்கையே ஆரோக்கியத்தை, செல்வத்தை, நிலையான வாழ்க்கையை, புகழை கொடுக்கும் சக்தியாக போற்றப்பட்டுள்ளது. புராதனமானதான இருக்கு வேதத்தில் 'பிரபஞ்ச ஒழுங்கு' (Cosmic Order) என்பதனைக் குறிக்கும் *ரிதா* (*rita*) எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இந்த ஒழுங்கே அனைத்திற்கும் மேலான ஆற்றலுடையதாகும். இதன் சீரான இயக்கம் மனிதர்களது நல்வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும். இதில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடியவையாகும் (Anikeeva, 2018: 789). இதனூடாக இயற்கை முழுமையான ஒன்றாக, ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக, தங்கியுள்ளதாக உள்ளது. ஏதேனும் ஒரு பகுதியில் ஏற்படுகின்ற தாக்கம் முழுமையினையும் பாதிக்கின்றது. எனவே நிர்ணயிக்கப்பட்ட இந்த ஒழுங்கு சீர்கெடாமல் இருப்பதற்கு மனிதர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாக உள்ளது. மனிதன் இயற்கையுடன் இசைவாக வாழ வேண்டிய அதன் ஒரு அங்கமே தவிர அதனை தன் இச்சைப்படி ஆளுகை செய்கின்ற அதிகாரம் கொண்டவன் அல்ல என்ற கருத்துக்கள் நிலைநிறுத்தப்படுகின்றன (Bloomfield, 1908: 60).

இதனுடன் தொடர்புடையதாகவே தர்மம் (*Dharma*) எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது தனிமனிதர்கள் தம்மளவில் பேணிப்பின்பற்றவேண்டிய ஒழுக்க நியமங்களை குறிப்பதாக அமைந்துள்ளது. அதாவது பிரபஞ்ச ஒழுங்கினை கருத்தில் கொண்டு அதில் பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் செயற்படுவதற்காக தனிமனிதர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளாக இவை அமைகின்றன. இதுவே 'ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மனித குலம் வாழ்க்கையில் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் எனில் முறைப்படுத்தப்பட்ட வகையில் இயற்கை பாதுகாக்கப்பட வேண்டும், மரங்கள் நடப்பட வேண்டும்' என்று இருக்கு வேதப்பாடல் ஒன்றின் ஊடாக உணர்த்தப்படுகின்றது (Renugadevi, 2012: 2). இது மரங்கள், செடிகள் என்பவை காற்றில் உள்ள நஞ்சுத்தன்மையினை நீக்கி தூய்மைப்படுத்துகின்றன (அதர்வணவேதம் *8.7.10*) என்ற புரிந்துணர்வின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மையாகும். இந்திய தேசிய தாவரவியல் ஆய்வுகளின் ஊடாக ஏறத்தாள *150* தாவரங்களும், செடிகளும் காற்றினை தூய்மைப்படுத்தி இயற்கையை பாதுகாக்கும் இயல்பினைக் கொண்டவையாக உள்ளன என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது (Rabindrakumar, 1985: 76). இவற்றினை விடவும் 'கடல் பெருஞ்செல்வத்தை வழங்கும் பொக்கிசம் அதனை பாதுகாக்க வேண்டும் (யசுர்வேதம் 38.22), ஆகாயத்தை மாசுபடுத்த வேண்டாம், சூழலில் நச்சுத்தன்மையினை சேர்க்க வேண்டாம் (யசுர்வேதம் *5.43*), நீரை மாசுபடுத்தவோ, மரங்களை வெட்டவோ வேண்டாம் (யசுர்வேதம் *6.33*), 'பூமி என்னுடைய தாய் நான் அவளுடைய குழந்தை' (அதர்வணவேதம் *12.1.12*), மரங்களின், செடிகளின் இலைகள் சூரியக் கதிர்களுடன் நேரடித்தொடர்பு கொண்டவை, இதன் ஊடாக இவ்வுலக வாழ்க்கைக்கு உகந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன (அதர்வணவேதம் *5.28.5*) என பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தினை குறிப்பிடுகின்ற பாடல்கள் வேதங்களில் உள்ளடங்கியுள்ளன.

பௌதீக உலகினை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக காட்டிய வேதங்களின் தொடர்ச்சியாக இந்த உலகினை இயக்குகின்ற இறைவனும், தனித்தனி உடல்களில் இருந்து மனிதர்களை இயக்குகின்ற ஆன்மாவும் ஒன்றே என்ற கருத்தினை உபநிடதங்கள் முன்வைக்கின்றன. இது பரமாத்மா, ஜீவாத்மா என்ற கருத்தாக்கங்களாக வெளிப்பட்டுள்ளது. இதன் ஊடாக சடம், ஆன்மா என்ற இரண்டு விடயங்களே உள்ளன. சடம் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது, தங்கியுள்ளது. ஆன்மா ஒன்றே அதுவே சடத்தின் இயக்கத்திற்கு காரணமாக அமைகின்றது என்ற முழுமைத்துவம் பேசப்படுகின்றது. இந்த

முழுமைத்துவம் பேணப்படுவது மனிதர்களது அறியாமையின் காரணமாக தடைப்படுகின்றது. இந்த அறியாமையினை நீக்கி அனைத்தும் ஒன்றே என்ற புரிந்துணர்வுடன், இயற்கையுடன் இசைவாக வாழ்கின்றபோது நிலைபேறான மகிழ்ச்சி இவ்வுலகில் நிலைபெற்றிருக்கும். இதுவே தைத்திரேய உபநிடதத்தில் 'இந்த பிரபஞ்சம் அதில் உள்ளடங்கியுள்ள அனைத்து படைப்புக்களும் உள்ளடங்களாக கடவுளுக்கே உரியதாகும் இதில் எந்தவொரு படைப்பும் வேறு எதுவொன்றிற்கும் உயர்வானது அல்ல' என்று குறிப்பிடப்படுகின்றது (Renugadevi, 2012: 3). மகா உபநிடத வாக்கியமான (6.71-75) 'வாசுதேவ குடும்பகம்' என்பது 'மொத்த உலகமும் ஒரே குடும்பம்' என்ற கருத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. இதன் விரிவான விளக்கம் 'அறியாமையின் காரணமாக சிறிய மனம் படைத்தவர்கள் இது என்னுடையது அது உன்னுடையது என்ற மனப்பான்மையில் செயற்படுவார்கள் ஆனால் ஞானமுடைய மனிதர்கள் இந்த மொத்த உலகமும் தம்முடைய குடும்பம் என்ற மனப்பான்மையில் செயற்படுவார்கள்' என்று அமைகின்றது (Ravikanth, 2021: 67). மொத்த உலகம் என்பதில் இயற்கை அம்சங்களான மரங்கள், நீர்நிலைகள், மலைகள், ஊர்வன, பறவைகள், விலங்குகள் உள்ளடங்களாக அனைத்தும் உள்ளடங்குகின்றன. இந்த மனப்பாங்கு இயற்கை நுகர்வில் பொறுப்புணர்வை ஏற்படுத்துகின்றது. தர்மத்தின் வழியில் செயற்படுவதற்குரிய வாய்ப்பினை வழங்குகின்றது. மனிதர்கள் நல்ல கர்மாவை பெற்றுக்கொள்வதற்குரிய அடிப்படையினை ஏற்படுத்துகின்றது. ஒவ்வொன்றின் இருப்பும் பிற ஒவ்வொன்றின் இருப்புடன் தொடர்புடையது என்ற புரிந்துணர்வுடன் நீண்டகால நோக்கில் நிலைபேறான வளர்ச்சிக்காக அடிப்படையாக பின்பற்றவேண்டிய ஒன்றாக அமைந்துள்ளது (Awasthi, 2021: 5)

இயற்கை பாதுகாப்பு தொடர்பில் புராணங்கள் பல்வேறு ஆழமான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. உதாரணமாக மச்சபுராணத்தில் தேவி பார்வதி பிள்ளைகளை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்தாது அசோக மரங்களை நட்டு சிறப்பாக பராமரிப்பது தொடர்பில் ரிசிகள் வினவியபோது அவர் 'ஒரு கிணற்றை தோண்டி நீர்த்தேவையினை பூர்த்தி செய்பவர் அதில் எத்தனை துளி நீர் கிடைக்கின்றதோ அத்தனை வருடங்களுக்கு சுவர்க்கத்தில் வாழ்வதற்குரிய தகுதியினை பெறுகின்றார், ஒரு பெரிய குளத்தின் நீர் பத்து கிணறுகளுக்கு சமமானது, ஒரு மகன் பத்து குளங்களுக்கு சமமானவன், ஆனால் ஒரு மரம் பத்து மகன்களுக்கு சமமானது. இதுவே என்னுடய நிலைப்பாடு, நான் இந்த பிரபஞ்சத்தை பாதுகாப்பதற்கு தேவையானதை செய்கின்றேன்' (மச்ச புராணம் 154: 506-512) என்று விளக்கம் வழங்கியதாக குறிப்பிடப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக மரங்களின் திருவிழா என்ற பெயரில் பாரியளவில் மரக்கன்றுகளை நடுகின்ற நிகழ்வு தொடர்பாக இப் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (Narayanan, 1997: 295).

வராக புராணத்தில் 'ஐந்து மாமரங்களை நட்டு பராமரிப்பவன் நரகத்திற்கு செல்ல மாட்டான்' என்றும், விஸ்ணு புராணத்தில் 'மரங்களை நட்டு பராமரிப்பவன் நரகவாசலை அடையவேண்டியிருக்காது' என்றும் 'வாய்பேச முடியாத விலங்குகளையும் ஏனைய படைப்புக்களையும் தீங்குசெய்யாதவர்கள், அழிக்காதவர்கள் தொடர்பில் கடவுள் கேசவன் மிகுந்த அன்புடன் உள்ளார்' (விஸ்ணு புராணம் 3.8.1) என்றும் குறிப்பிடப்படுகின்றது. நரசிம்ம புராணத்தில் 'பாவம் செய்த மனிதனே! நீ உன்னுடைய உணவுக்காக ஒரு பறவையினை கொலை செய்வாயேயாயின் நீ புனித நதிகளில் நீராடுவதில், புனிதத் தலங்களுக்கு பயணம் செய்வதில், கடவுள் வழிபாடு மேற்கொள்வதில், தானங்கள் செய்வதில் என்ன பயனுள்ளது என்று நினைக்கின்றாய்?' என்று அமைக்கப்பட்டிருக்கும் சூத்திரம் கொல்லாமையினை வலியுறுத்துவதுடன் அதுவே ஆன்மீக செயற்பாட்டின் அடிப்படையான அம்சம் என்பதனையும் வெளிப்படுத்துகின்றது (Dwivedi, 2000: 5). பாகவத புராணத்தில் 'ஆகாயம், காற்று, நீர், தீ, பூமி, அனைத்து படைப்புக்கள், மரங்கள், கோள்கள், ஆறுகள், கடல்கள் என அனைத்தும் கடவுளது உடலின் பாகங்களேயாகும். இதனை ஞாபகம் கொள்கின்ற ஒரு பக்தன் அனைத்தையும் மதித்து நடப்பவனாகின்றான்' (பாகவதபுராணம் 11.2.41) என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்விடயமே இந்து சமயத்தில் அகிம்சை வலியுறுத்தப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது. அகிம்சை சக மனிதர்களை நோக்கியது மட்டுமல்ல அவர்களது புறச்சூழலில் உள்ள விடயங்களையும் உள்ளடக்கியதாகும். இதுவே இயற்கையினை புனிதமானதாக கருதி வழிபாட்டிற்குரியதாக மாற்றியுள்ளது. இது மனிதர்கள் இயல்பாகவே இயற்கையினை பாதுகாக்கின்ற ஒரு மனப்பாங்கினை வளர்த்துள்ளது.

இதிகாசங்களிலும் இயற்கைப் பாதுகாப்பு தொடர்பான முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதனை அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளது. இராமாயணத்தின் முதலாவது சுலோகமான

*“मा निषाद! प्रतिष्ठां त्वं अगमः शाश्वतीः समाः, यत् क्रौञ्चमिथुनात् एकं अवधीः काममोहितम् “*

“Maa Nishada Pratistham Tvamagamahsāsvati Samaa

Yat Kraunchamithunaadekam Avadhi Kaamamohitam”

என்பது மகரிசி வான்மீகி கிரௌஞ்சப்பறவை ஒன்று வேடனால் கொல்லப்பட்ட நிகழ்வை அவதானித்தபோது எழுந்த கோபத்தில் உச்சரித்த வார்த்தையாக அமைந்துள்ளது. இது பின்வருமாறு பொருள்கொள்ளப்படுகின்றது “வேடனே! மனிதர்கள் மாத்திரமல்ல மனிதர்கள் அல்லாதவைகளும் இன்பத்தில் லயித்திருக்கும்போது துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படக்கூடாது, நீ அன்பான பறவைகள் இரண்டில் ஒன்றை கொலை செய்து தாளாத துன்பத்தில் சிக்கிக்கொண்டாய், இந்த பாவம் பல யுகங்களுக்கு உன்னை நீங்காது”. இது இயற்கையின் கூறுகள் தம்மளவில் பெறுமானத்தினைக் கொண்டவை என்பதனையும், மனித தலையீடுகள் ஊடாக அவை பாதிப்புக்கு உள்ளாக்கப்படுவது மனிதர்களுக்கு தீங்கினைக் கொண்டுவரும் என்பதனையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. இதுபோன்றதொரு நிகழ்வே மகாபாரதத்தில் மன்னர் பாண்டு இணைசேர்ந்திருந்த மான்களில் ஒன்றை கொலை செய்தமையினால் பெற்ற சாபத்தின் காரணமாக ஆட்சி அதிகாரத்தை துறந்தமைக்கும், தனக்கான சந்ததியினை உருவாக்க முடியாமல் போனமைக்கும், இறுதியில் மரணத்திற்கும் காரணமாக அமைந்திருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

கி.மு ஏழாம் நூற்றாண்டில் நிகழ்ந்ததை கி.மு மூன்றாம் நூற்றாண்டில் எழுத்தாக்கமாக்கப்பட்டுள்ள இராமாயன காவிய நிகழ்வுகள் வனங்களுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டவையாக படைக்கப்பட்டுள்ளன. மிதிலையில் இருந்து இலங்கை வரையில் பரந்திருந்த பல்வேறு வனங்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. சித்திரகூடம், தாண்டகவனம், பஞ்சவதி, கிஸ்கிந்தா, அசோகவனம் என்பன இவற்றில் மிகப்பிரதானமானவையாகும். இவ் வனங்கள் முனிவர்கள் வாழ்பவை, சந்நியாச வாழ்வை மேற்கொள்கின்ற சாதாரண மனிதர்கள் வாழ்பவை, விலங்குகள் மாத்திரம் வாழ்கின்ற வனங்கள் எனப் பலவகையாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆட்சியாளர்களினால் இயற்கையின் ஒழுங்கினை பாதுகாக்கவும், மனிதவாழ்வினை நெறிப்படுத்தவும் இவ் வனங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. உயிர்காக்கும் மூலிகைகள் இயற்கையிலேயே கிடைப்பனவாக உள்ள விடயத்தினை சஞ்சீவினி மூலிகை தொடர்பான பதிவுகள் வெளிப்படுத்துகின்றன. பல்வேறு விலங்குகள் மனிதர்களுக்கே உரித்தான குணங்களையும், உணர்வுகளையும் வெளிப்படுத்துபவையாகவும் மனிதர்களுக்கு பல்வேறு வகைகளில் உதவுபவையாக இருப்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன (Beggiora, 2021: 207). இவ்விடயங்கள் மனிதர்கள் பூரணமான நல்வாழ்க்கை வாழ்வதற்கு இயற்கையின் கூறுகளுடன் இசைவான வாழ்க்கை இன்றியமையாத ஒன்றாக உள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்றன. மகாபாரத காவியத்தில் புதிய நகர நிர்மாண அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக காடுகள் அழிக்கப்படுகின்ற பதிவு ஒன்று உள்ளது. பாண்டவர்கள் இந்திரபிரஸ்த நகரை ஸ்தாபிப்பதற்காக தாண்டக வனத்தினை முற்றிலும் தீக்கிரையாக்கியதாகவும், இதன்போது அவ் வனத்தில் இருந்து பல்வேறு உயிரினங்களும் பலிகொல்லப்பட்டன எனவும் ஆதிபர்வத்தில் குறிப்பிடப்படுகின்றது (மேலது: 2010). ஆனால் இயற்கை அமைப்பினை பாதிப்புக்கு உள்ளாக்கி உருவாக்கிய நகரில் மகிழ்ச்சியாக நீண்டகாலம் வாழ்வதற்குரிய வாய்ப்பு அவர்கள் எவருக்குமே வழங்கப்படவில்லை என்ற யதார்த்தம் இதிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது.

தர்மசாஸ்திரங்களிலும் இயற்கை பாதுகாப்பு தொடர்பான வெளிப்படுத்தல்களை அடையாளப்படுத்தக்கூடியதாக உள்ளது. உதாரணமாக மனுதர்மசாஸ்திரத்தில் ‘சிறுநீர், மலம், எச்சில் முதலான தூய்மையற்ற பொருட்கள், அல்லது இவை தோய்ந்துள்ள உடைகள், தூய்மையற்ற தன்மையினை ஏற்படுத்துகின்ற இரத்தம், நஞ்சு போன்றவற்றினை நீரிலே எறிதல் ஆகாது’ (மனுதர்சசாஸ்திரம் 4.56) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல அர்த்தசாஸ்திரத்தில் மரங்களை வெட்டுதல், குளங்களை சேதப்படுத்துதல், நீர்நிலைகளை அசுத்தப்படுத்துதல் முதலான இயற்கையினை

பாதிக்கின்ற செயற்பாடுகள் தண்டனை வழங்குவதன் ஊடாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக அர்த்தசாஸ்திரத்தில் பழம் தரும் மரங்கள், பூ தரும் மரங்கள், நிழல் தரும் மரங்கள், மருத்து குணம்மிக்க மரங்கள், மரத்ததின் கிளைகள், ஆலயங்களில் உள்ள மரங்கள், பொதுமக்கள் கூடும் இடங்களில் உள்ள மரங்கள் என பல தரப்படுத்தப்பட்டு அவற்றினை வெட்டுபவர்களுக்கு விதிக்க வேண்டிய தண்டப் பணத்தின் அளவு நீதி வழங்குநர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது (Shamasastry, 1905: 206). இந்நூல்கள் மக்கள் தொகை பெருகி புதிய வாழ்விடங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் அவர்களை தர்மநெறியில் வழிப்படுத்துவதற்கும் இயற்கையுடன் இசைவான வகையில் வாழ்வதற்கு வழிகாட்டுவதற்குமாக உருவாக்கப்பட்டவையாகும். அடிப்படையில் தர்மம் என்பது நிலைபேறு எனும் பொருளுடைய *தர்* எனும் சமஸ்கிருத சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாகும். இதில் தனிநபர்களது உரிமைகள், முன்னுரிமைகளுக்கு அல்லாமல் அவர்களது கடமைகள், பொறுப்புக்கள் என்பன முக்கியத்துவப்படுத்தப்பட்டு முழுநிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றில் தர்மம் என்பது பிரபஞ்ச ஆற்றலுடன் மனிதர்களது உரிமைகளும் கடமைகளும் இணைக்கப்பட்டு முறைப்படுத்தப்பட்ட வழியில் நடந்துகொள்ளுதல் என்பதாக வெளிப்படுத்தப்படுகின்றது (Taback, & Ramanan, 2014: 27)

இந்துசமய வழிகாட்டலில் ஆழமான நம்பிக்கை கொண்டவராக இருந்த மகாத்மா காந்தியின் சூழலியல் பாதுகாப்பு மற்றும் நிலைபேறான அபிவிருத்திச் சிந்தனைகள் இவ்விடயத்தில் மிகவும் அவதானத்திற்குரியவையாக அமைகின்றன. பொதுவாக இந்திய சமயங்களதும், குறிப்பாக இந்து சமயத்தினதும் வழிகாட்டல்களின் வெளிப்பாடாக அமையும் இவருடைய கருத்துக்கள் சமகால சூழ்நிலைக்கு மிகுந்த பொருத்தப்பாடுடையவையாக உள்ளன. "இயற்கை மனிதர்களுக்கு அவசியமானவற்றை நிறைவேற்றுவதற்கு போதுமான வளங்களைக் கொண்டுள்ளது ஆனால் மனிதர்களது பேராசைகளை நிறைவேற்றுவதற்கு அல்ல" என்பது இயற்கைவளப்பாதுகாப்பு மற்றும் நுகர்வு தொடர்பாக மகாத்மா காந்தியின் மிகப் பிரபலமான கூற்றாகும். 1909ஆம் ஆண்டு இவர் எழுதிய *சுய ராஜ்ஜியம்* (Hindu Swaraj) எனும் புத்தகம் கட்டுப்பாடற்ற தொழிற்சாலைச் செயற்பாடுகள், பொருளீட்டல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சூழலியல் சீர்கேடுகள் காரணமாக இவ்வுலகம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை எதிர்வுகூறியுள்ளது. இது நவீன சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் முன்வைக்கின்ற கருத்துக்களுக்கு எல்லாம் முன்னோடியாக உள்ளது என்ற அடிப்படையில் தன்னுடைய தொலைநோக்கினாலும், செயற்பாடுகளினாலும் ஒரு முன்னோடியான சுற்றுச்சூழலியல் சிந்தனையாளராக இவரை அடையாளப்படுத்துகின்றது. அஹிம்சை செயற்பாடுகளை முன்நிறுத்தி செயற்பட்ட இவருடைய சிந்தனைகள் பின்பற்றப்படுவது யுத்த தளபாடங்களது உற்பத்தியிலும் பிரயோகத்திலும் இயற்கை வளங்கள் சீர்கேடுகளுக்கு உள்ளாக்கப்படுவது தவிர்க்கப்படுவதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும் (Tiwari, 2019: 142).

பெருந்தொகையான மக்கள் தொகையினைக் கொண்டுள்ள இந்தியா அபிவிருத்தி திட்டங்களிலும் வாழ்க்கை முறையிலும் மேலைத்தேய மாதிரிகளை பின்பற்றினால் இவ்வுலகில் உள்ள வளங்கள் போதுமானதாக இருக்காது என்ற எதிர்வுகூறலையும் இவர் முன்வைத்துள்ளார். இதனுடன் தொடர்புடையதாக வறுமை மிகமோசமான சீரழிக்கும் காரணி என்றும் ஒவ்வொருவரும் தங்களுக்குரிய பங்கிற்கு அப்பால் ஆசைப்படாதவிடத்து இயற்கை வறுமையற்ற வாழ்க்கைக்கு போதுமானதைக் கொண்டுள்ளது என்று குறிப்பிடுகின்றார். காந்தி நவீன தொழிநுட்பத்திற்கு எதிரான ஒருவர் அல்ல மாறாக அது இலாபநோக்கிற்கு அல்லாமல் மனிதாபிமானநோக்கில் பயன்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். இது இயற்கை எதிர்கால சந்ததிக்கும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உணர்வுடன் செயற்படுவதற்கும், அபிவிருத்திச் செயற்பாடுகளை நிலைபேறான வகையில் மேற்கொள்வதற்கும் இன்றியமையாததாக உள்ளது. விஞ்ஞான அறிவும், தொழிநுட்ப முன்னேற்றமும் சகமனிதர்களையும், இயற்கையினையும் அடக்குமுறைக்கு உள்ளாக்குவதில் வெற்றிபெற்றுள்ள நிலையில் ஒழுக்கவழிகாட்டல்கள் அதன் கடுமைத்தன்மையினை குறைப்பதற்கு அவசியமாக உள்ளன. காந்தியின் சுயராஜ்ஜிய சிந்தனை இதனை முதன்மையாக உள்ளடக்கியதாக உள்ளது (Guggenberger, 2021: 8).

இந்து கற்கைகளுக்கான ஒக்ஸ்போர்ட் நிலையத்தினால் தயாரிக்கப்பட்ட 'காலநிலை மாற்றம் தொடர்பான இந்து பிரகடனம்' (Hindu Declaration on Climate Change) உலக சமயங்களின் பாராளுமன்றத்தில் 2015ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில் 'இயற்கையுடன் மனிதர்கள் கொண்டுள்ள உறவு தீவிரமான வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ளது. இதில் ஒரு தெரிவாக அல்லாமல் மனித குலம் தப்பிப்பிழைத்திருப்பதற்காக கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாக உள்ளது. இயற்கையினை அழிப்பது என்பது மனிதர்கள் தங்களைத்தாங்களே அழித்துக்கொள்வதேயாகும்' என்று வலியுறுத்தப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவினை பேணுவதற்காக இந்துசமயத்தில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் வலியுறுத்திக் குறிப்பிடப்பட்டுள்ளன. தற்போது ஏறத்தாள நாற்பது சர்வதேச நிறுவனங்கள் ஏற்றுக்கொண்டு பின்பற்றுகின்ற இந்த பிரகடனத்தில் வேதங்கள், மகாபாரதம், பாகவதபுராணம், மற்றும் உபநிடதங்களில் உள்ள கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும். இதில் தனிநபர் மாற்றத்தின் ஊடாக பிரபஞ்ச மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஒவ்வொருவரும் தங்களுடைய செயற்பாடுகளை பூமித்தாயை பாதுகாக்கும் வகையில் அமைத்துக்கொள்வதே தர்மமாகின்றது. இவ்வாறு மனிதர்கள் தர்மவழியில் நடக்கின்றபோது அவர்களது கர்மம் நேர்நிலையான அமைந்து நிலையான வாழ்வியலை ஏற்படுத்தும் (Enkins, Willis, & Evan Berry, 2018: 91).

எவ்வாறாயினும், இவ்வாறு இயற்கையினை பாதுகாப்பதற்குரிய அவசியம் பற்றியும், அதற்குரிய வழிமுறைகள் பற்றியும் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்களை அறிந்துகொள்கின்ற அதேவேளையில் உலக அழிவு தொடர்பில் மகாபிரளயம் என வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்தும் தெளிவாக புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. புராணங்கள் இச் சிந்தனையினை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பூமித்தாய் தன்மீது நடக்கின்ற அதர்மங்கள் தாங்கிக்கொள்ள முடியாத நிலையினை அடைகின்றபோது தன்னுடைய பாரத்தினை குறைக்கும்படி இறைவனிடம் வேண்டிக்கொள்கின்றபோது மகாபிரளயம் ஏற்படுத்தப்பட்டு அனைத்தும் அழிக்கப்பட்டு மீண்டும் புதிதாக ஆரம்பிப்பதற்குரிய வாய்ப்பும் வழங்கப்படுகின்றது (Awasthi, 2021, ப. 8). இது இயற்கை சமநிலையினை பேணுவதற்குரிய செயற்பாடாக குறிப்பிடப்படுகின்றது. நான்கு யுகங்களான சத்ய, திரேத, துவாபர, கலி ஆகிய ஒவ்வொன்றின் முடிவிலும் உலகம் அழிவடைந்து புதிதாக உருவாகின்றது. பூரண அழிவில் இருந்து பாதுகாப்பதற்காக பரமாத்மா பல்வேறு அவதாரங்களை எடுத்துள்ளதாக புராணங்கள் குறிப்பிடுகின்றன. இது இயற்கைக்கு எதிரான சீர்கேடுகள் மனித குணாம்சங்களில் இயல்பாகவே ஏற்படுத்தப்படக்கூடிய ஒன்றுதான், அதன் விளைவாக பூரண அழிவு தவிர்க்க முடியாத ஒன்றுதான் என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகின்றதா? என்ற விடயம் தொடர்பிலும் சிந்திக்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் திறன்மிகு அவதார செயற்பாடுகள் ஊடாக பூரண அழிவு தடுக்கப்படுவதாக குறிப்பிடப்படுகின்றமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

## பகுப்பாய்வு

கொல்லாமை அல்லது தீங்கு செய்யாமை என்பது இந்துசமயத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாக உள்ளது. இது சக மனிதர்கள் மாத்திரமல்லாமல் ஐம்பூதங்களையும் அவற்றின் இணைவினால் உருவான இயற்கையில் உள்ள அனைத்து விடயங்களையும் இலக்காகக்கொண்டதாகும். இதுவே இயற்கைக்கு தீங்கு செய்யாமல் இயற்கையுடன் இசைவாக வாழ வேண்டும் என்ற வழிகாட்டலுக்கு அடிப்படையான தத்துவமாக அமைந்துள்ளது. இதனை சாதாரண மக்கள் தவறாது பின்பற்ற வேண்டும் என்பதற்காக இயற்கை பௌதீக அதீதமான கடவுள் என்ற கருத்தாக்கத்துடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. இந்துசமயத்தில் பல்வேறு மரங்கள், செடிகள் வழிபாட்டிற்குரியவையாக உள்ளன. உதாரணமாக வேம்பு, அரசு, துளசி போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இவற்றில் இறைவன் வசிப்பதாகவும், பசுமையான மரங்களை வெட்டுவது பாவத்தை பரம்பரைக்கே கொண்டு வந்து சேர்க்கும் என்று குறிப்பிடப்படுகின்றது. இது புனைவாக இருப்பினும் இவற்றில் உள்ளடங்கியுள்ள மருத்துவ குணாம்சங்கள், ஒளித்தொகுப்பின் ஊடாக புவியின் வெப்பசமநிலையினை பேணப்படுகின்றமை, மனிதர்களது சுவாசத்திற்குரிய ஒட்சிசன் வாயுவை வெளியேற்றுகின்றமை என பல்வேறு வகைகளில் மனிதர்களுக்கு பயனுடையவையாக உள்ளன. இந்த காரணத்தினால் கேள்விகளுக்கு உட்படாது அவை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே இதற்கான காரணமாக

அமைந்துள்ளமை உள்ளார்ந்த உண்மையாக புரிந்துகொள்ளப்பட வேண்டியதாகும். இவற்றுடன் இந்து ஆலயங்களில் தலவிருட்சம் என்ற பெயரில் வெவ்வேறு மரங்கள் புனிதத் தன்மை கொண்டவையாக பராமரிக்கப்பட்டு வருகின்றன. இது அந்த ஆலயங்களின் பக்தர்கள் அதனையொத்த மரங்களை வேறு இடங்களிலும் பராமறிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதாக உள்ளது. அது மாத்திரமல்லாமல் பொது இடங்களில் பாதுகாக்கப்பட வேண்டியதாக கருதப்படுகின்ற மரங்களின் கீழே சிறிய கருங்கல்லினை வைத்து அதனை கடவுளாக பாவனை செய்வதன் ஊடாக குறித்த மரத்தின் கீழ் கடவுள் அமர்ந்திருப்பதன் ஊடாக அதனை வெட்டுதல் பாவகாரியம் என்ற உணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. இவ்விடயமானது பல்வேறு மரங்கள் நீண்ட காலத்திற்கு பாதுகாக்கப்படுவதற்குரிய வாய்ப்பினை வழங்குகின்றது. கடவுள்களது வாகனங்களாக பல்வேறு மிருகங்கள் குறிப்பிடப்படுவது அவை புனிதத்தன்மை கொண்டவையாக்கப்படுவதுடன் பாதுகாக்கப்படுவதும் உறுதி செய்யப்படுகின்றது. நவதானியங்களை கோபுரகலசத்தில் பாதுகாப்பதும், பல்வேறு மங்கள நிகழ்வுகளில் நவதானியங்களை பயன்படுத்துவதும் அவற்றினை பாதுகாத்து தொடர்ந்து பேணிச் செல்வதற்கான ஏற்பாடுகளாகவே நோக்கப்படுகின்றன.

இந்து புராண கதைகளில் ஒன்று கங்கை நதி பூமிக்கு கொண்டுவரப்பட்டமை தொடர்பானது. இதில் ஆரம்பத்தில் தன்னுடைய வேகத்தினை பூமி நேரடியாக தாங்காது என்ற காரணத்தினால் பூமிக்கு வருவதற்கு மறுத்த கங்கை சிவன் தன்னை தலையில் வாங்கி பின்னர் பூமியில் பெருகியோடச் செய்வார் என்ற உத்தரவாதம் வழங்கியதன் அடிப்படையிலேயே வந்ததாக குறிப்பிடப்படுகின்றது. இக் கதையின் பின்னால் உள்ள தத்துவம் புரிந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. சிவனின் ஜடாமுடி என்பது அடர்ந்த காட்டுக்கு உவமையாக கொள்ளப்பட்டால் மலைக்காடுகளிலேயே பெருமழை பெய்வதன் ஊடாகவும், ஊற்றுக்கள் ஊடாகவும் அந்த காட்டிலேயே நதி உருவாகின்றது, காடுகள் இல்லாத சமவெளியில் நதி பாய்ந்து செல்கின்றபோது நிலச்சரிவு உள்ளிட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இதன் ஊடாக நதியின் உருவாக்கத்திற்கும் அவை இயற்கைக்கு பாதிப்பு இன்றி பாய்ந்து செல்வதற்கும் காடுகள் பராமரிக்கப்பட வேண்டியது அவசியம் என்பது உணர்ந்துகொள்ளப்பட வேண்டியதாக உள்ளது. அத்துடன் புனித நதிகளாக குறிப்பிடப்படுபவற்றில் நீராடுவது மனிதர்களின் பாவங்களை போக்குகின்றது என்ற நம்பிக்கையின் பின்னால் உள்ள தத்துவார்த்த நோக்கம் அந்த நதிகளை மனிதர்கள் தங்களது பாவங்களை போக்கிக்கொள்வதற்கான ஒரு இடமாக கருதியேனும் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும்.

இதுபோன்று மறைபொருளாக அல்லது கருத்துருவாக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் விஞ்ஞானபூர்வமாக விளங்கிக்கொள்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது இந்து சமயம் எவ்வாறு இயற்கையுடன் இசைவானதாக உள்ளது என்பதனை புரிந்துகொள்வதற்குரிய வாய்ப்பினை அதிகரித்த அளவில் வழங்குதாக உள்ளது. உதாரணமாக 'அனைத்தும் பிரம்மமே, பிரம்மத்தில் இருந்து உருவாகின்ற அனைத்தும் பிரம்மத்திலேயே ஐக்கியமாகின்றன' என்ற சமய கருத்தாக்கத்தில் பிரம்மம் என்பது இயற்கை என்று புரிந்துகொள்ளப்படக்கூடியதாக உள்ளது. இதன்படி 'அனைத்தும் இயற்கையே, மனிதர்கள் உள்ளடங்களாக இயற்கையில் இருந்து உருவாகின்ற அனைத்தும் இறுதியில் இயற்கையாகவே மாறுகின்றன' என்று புரிந்துகொள்ள முடியும். இதனையே மேலைத்தேய ஆதி கிரேக்க மெய்யியலாளர் எம்படெக்ல்ஸ் எங்களது உடல் நிலத்திற்கும், இரத்தம் நீருக்கும், உடலின் வெப்பம் நெருப்பிற்கும், சுவாசம் காற்றிற்கும் மாறுகின்றன என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மறு வடிவமே 'அகம் பிரம்மஸ்மி' எனும் 'நான் பிரம்மமாவேன்' எனும் பிரகதாரண்ய உபநிடத வாக்கியமாகும். இது ஒருவர் தன்னை இயற்கையாக உணர்கின்ற நிலையாகும். இவ்வாறு இயற்கையில் அங்கமாக உள்ள ஒருவர் இயற்கையினை அழிவுக்கு உள்ளாக்குவது தன்னையே சுய அழிவுக்கு உள்ளாக்குவதேயாகும் என்ற புரிதல் ஏற்படுகின்றது. இது உணரப்படாமல் இருப்பது அறியாமை என்றும் இதற்கு காரணம் மாயை என்றும் சமயம் குறிப்பிடுகின்றது. அதுபோன்று யுகங்களின் இறுதியில் பூரண அழிவில் இருந்து உலகினை பாதுகாப்பதற்காக பரமாத்மா அவதாரம் எடுப்பதாக குறிப்பிடப்படுகின்றது. கலியுகத்தின் துன்பங்களில் இருந்து குறிப்பாக சூழலியல் சீர்கேடுகளினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்பினை பெறுவதற்காக பரமாத்மாவின் கூறுகளாக உள்ள தனிநபர்களான ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தம்மளவில் இவ்வுலகினை பாதுகாப்பதற்கான அவதாரங்களாக சிந்தித்து பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டியது தற்காலத்தில் இன்றியமையாத தேவையாக உள்ளது.

இந்து தத்துவத்தில் தர்மம், கர்மம் என்ற இரண்டு எண்ணக்கருக்கள் முக்கியத்துவம் கொண்டவையாக உள்ளன. ஒருவர் தன்னுடைய சிந்தனை, உணர்வு, செயல்கள் அனைத்தையும் நியாயமான வகையில் அமைத்துக்கொள்வது தர்மம் எனப்படுகின்றது. இவ்வாறு செயற்படுகின்றபோது அவருக்கு பாவ கர்மங்கள் சேர்வது இல்லை. பாவ கர்மங்கள் அற்ற செயற்பாடுகளே மனிதர்களது நிலைபேறான மகிழ்ச்சிக்கு உத்தரவாதமளிக்கின்றன. அனைவரும் இவ்வாறு செயற்படுகின்றபோது உலகின் ரிதம் பேணப்படுகின்றது. இந்த நிலைபேறான மகிழ்ச்சியே சச்சிதானந்தம் என்று குறிப்பிடப்படுகின்றது. இச் சச்சிதானந்தம் அடையப்பெறுவதற்கு இந்து சமயம் குறிப்பிடும் நான்கு புருசார்த்தங்களான அறம், பொருள், இன்பம், வீடு என்ற எண்ணக்கருக்கள் தெளிவாக புரிந்துகொள்ளப்பட்டு பின்பற்றப்பட வேண்டியுள்ளன. சமகால வாழ்வியலில் மனிதர்களினால் இன்பமே முன்நிலைப்படுத்தப்படுகின்றது. உலகியல் இன்ப ஆசைகளின் பெருக்கமும் அவற்றை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் பொருளீட்டல் செயற்பாடுகளுமே இயற்கை எல்லையற்ற வகையில் நுகர்வுக்கு உள்ளாக்கப்படுவதற்கும், சீரழிக்கப்படுவதற்கும் காரணமாக அமைந்துள்ளன. இது உண்மையில் சுய அழிவை நோக்கிய பயணமாகும். மாறாக தர்மத்தை அறிந்துகொண்டு அறவழியில் பொருளீட்டி இன்பநுகர்வினை மேற்கொள்கின்றபோது அது இயற்கையுடன் இசைவானதாகவும் நித்தியமான ஆனந்தத்தை அனைத்து தளங்களிலும் நிலைபெறச் செய்வதாகவும் அமையும். இத்தகைய அறவாழ்க்கையினை உறுதிப்படுத்துபவையாகவும், நுகர்வுக்கலாசாரத்தை குறைத்து வாழ்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்துபவையாகவும் பல்வேறு விரதங்கள் இந்துக்களின் வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

இயற்கைவள நுகர்வுடன் தொடர்புடைய விடயங்களில் ஒன்று சூழலியல் நீதி எனும் எண்ணக்கருவாகும். மகாத்மா காந்தி போன்ற கீழைத்தேய சூழலியல் பாதுகாப்புச் செயற்பாட்டாளர்கள் குறைந்த வளப்பயன்பாட்டுடன் எளிமையான வாழ்க்கை முறையினை ஊக்குவிக்கின்றனர். மேலைத்தேய வாழ்க்கைமுறையினை இந்தியர்கள் வாழ ஆரம்பித்தால் இயற்கைவளங்கள் போதுமானதாக இராது என்று குறிப்பிடுகின்றார். இயற்கைபாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகளை ஒரு சாரார் மாத்திரம் மேற்கொள்கின்ற அதேவேளையில் உலகில் இன்னுமொரு பகுதியில் உள்ளவர்கள் இயற்கையினை பெருநுகர்வுக்கு உள்ளாக்குகின்றனர் எனில் அதனால் ஏற்படும் பாதிப்புக்கள் அனைத்து தரப்பினருக்கும் பொதுவானதாகவே அமைகின்றன. அது மாத்திரம் அல்ல இயற்கை அனர்த்தங்களினால் வளங்களை அதிகளவில் நுகர்வுக்கு உள்ளாக்குகின்ற வசதியான மக்களைவிட குறைவான வளப்பயன்பாட்டுடன் வாழ்கின்ற ஏழைகளே அதிகம் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட அபிவிருத்தியடைந்துவரும், குறைவிருத்தியடைந்த நாடுகளே சூழலியல் பாதிப்புக்களினால் அதிகம் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. இவ்விடயமானது இயற்கை பாதுகாப்பு மற்றும் நுகர்வு தொடர்பில் இவ்வுலகில் உள்ள அனைவருக்கும் பொதுவான நியதி பின்பற்றப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றது. ஏனெனில் உலக அழிவினை எதிர்வுகூறி மனிதர்கள் குடியேறுவதற்கான வேறு கிரகங்கள் தொடர்பாக வளர்ச்சியடைந்த மேலைத்தேய நாடுகளின் மூளைசாலிகள் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். இவர்களது விண்கலத்தில் நோவாவின் படகில் வழங்கப்பட்டதுபோன்று அனைத்து உயிரினங்களுக்கும் இடம் வழங்கப்படுமா என்பது ஒரு கருதுகோளான வினாவே. அதாவது இம் முயற்சிகள் வெற்றிபெறும்போது அதில் பயனடைவது அந்நாடுகளில் இருக்கக்கூடிய தற்போது இயற்கையினை பெருநுகர்வினால் அழிவுக்கு உள்ளாக்குகின்ற பெருமுதலாளிகளாகவே இருப்பார்கள். இப்பூவுலகம் அழிவடைகின்ற நிலையில் மனிதர்கள் வாழக்கூடிய புதிய கிரகம் ஒன்று கண்டுபிடிக்கப்படுமாக இருந்தால் மூன்றாம் உலக ஏழைகளும், இப் புவியில் உள்ள ஏனைய உயிரினங்களும் இங்கு அநாதரவாகவே விட்டுச் செல்லப்படும்.

## முடிவுரையும் பரிந்துரைகளும்

இந்து சமயத்தின் பல்வேறு நூல்களில் அடிப்படையிலேயே இயற்கையும் மனிதனும் வேறானவை அல்ல, மனிதர்களது நிலைபேறான வாழ்க்கைக்கு இயற்கை பாதுகாக்கப்படுவது இன்றியமையாத ஒன்று என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் போதுமானளவு அறிந்துகொள்ளப்பட்டு இந்து சமூகத்தின் ஒன்றிணைந்த விழிப்புணர்வுநிலையில் (Collective Consciousness) செயற்பட்டு இயற்கைபாதுகாப்பிற்கு போதுமான பங்களிப்பினை வழங்குவதாக உள்ளது. எவ்வாறாயினும் உலகமயமாக்கம், நுகர்வுக்கலாசாரம் என்பவற்றின் தாக்கம் இயற்கையின் எல்லையற்ற நுகர்வினை ஊக்குவிப்பதுடன் அதனை நியாயப்படுத்துவதற்குரிய இயலுமையினையும் வழங்கியுள்ளது. இது

வளர்ச்சியடைந்து வருகின்ற மிக மோசமான ஒரு நிலையாகும். இவ்விடயத்தில் இயற்கை வளப் பிரயோகம் தொடர்பில் காந்தியின் கூற்று கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

தற்போது சர்வதேச தன்மைகொண்டதாக உள்ள சூழலியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை சமயங்களின் வழிகாட்டல்களை சீராக பின்பற்றுவதன் ஊடாக அடைந்துகொள்ள முடியும். ஆனால் உயர் ஆன்மீகத்தன்மை கொண்ட கொள்கையளவிலான வழிகாட்டல்களுக்கும் லௌகீகவாழ்க்கையினை முதன்மைப்படுத்திய நடைமுறைவாழ்க்கைக்கும் இடையில் இருக்கும் பாரிய இடைவெளி காரணமாக பல்வேறு விடயங்கள் அசாதாரணமானவையாக மாறியுள்ளன. இந்த இடைவெளியின் உருவாக்கத்திற்கு உலகமயமாக்கம், முதலாளித்துவ செயற்பாடுகளின் தாக்கம் என்பன பிரதான காரணங்களாக அமைந்துள்ளன. இவை இயற்கை என்பது அனைத்து படைப்புக்களிலும் உயர்வானதாக உள்ள மனித இனத்தினால் வெற்றிகொள்ளப்பட வேண்டியது என்ற கற்பிதத்தினால் உருவான ஒரு நிலையாகும். இதன் பாதக விளைவுகள் மேலைத்தேய சமூகத்தினால் தற்போது உணரப்பட்டுள்ளது. இதுவே 2030ஆம் ஆண்டுக்குள் அடையப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி நிலையான அபிவிருத்தி இலக்குகள் நிர்ணயிக்கப்படவும் அதற்கு பெருந்தொகையான முதலீடுகள் மேற்கொள்ளப்படவும் உந்தியுள்ளது. ஆனால் இந்துசமய வழிகாட்டல்களில் இயற்கையின் பகுதியாக மனிதன் உள்ளான் என்பதன் அடிப்படையில் இயற்கை மனிதனால் வெற்றிகொள்ளப்பட வேண்டியதோ, ஆளுகை செய்யப்பட வேண்டியதோ அல்ல மாறாக இசைந்து வாழ வேண்டியது என்பதாக உள்ளது. இது இயற்கையினை பெரு நுகர்வுக்கு உள்ளாக்கி சூழலியல் சீர்கேடுகளுக்கு காரணாக அமைந்த மேலைத்தேய மானுடமையவாத சிந்தனையில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக, உயர்வானதாக உள்ளது. சமகால சூழலியல் பிரச்சினைகளையும் எதிர்காலத்தில் மனித குலம் நிலைபேறான தன்மையினை உறுதிசெய்துகொள்வதற்கு பின்பற்ற வேண்டிய ஒரு வழிகாட்டலாகவும் உள்ளது.

இங்கு இந்துசமய வழிகாட்டல்கள் சூழலியல் பாதுகாப்புக்கு ஆதரவாக உள்ளனவா என்பதனை அறிந்துகொள்வதுடன் மாத்திரம் நின்றுவிடாது அவற்றின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ள கருத்துக்கள், பெறுமானங்கள் என்பன எவ்வாறு தொடர்புடைய பிரச்சினையினை பொருத்தமான வகையில் அணுகுவதற்கு பயன்படுத்தப்பட முடியும் என்பது தொடர்பிலும் சிந்திக்க வேண்டியுள்ளது. விஞ்ஞான அறிவினால் மாத்திரம் மனித குலம் எதிர்கொண்டுள்ள கலாசார பின்னணிகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகளை தீர்த்துவிட முடியாது. அதுபோல சர்வதேச உடன்படிக்கைகள், நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளினால் மாத்திரமும் இப் பிரச்சினைகள் தனித்து எதிர்கொள்ளப்பட முடியாது. இதற்கு மனித ஆழ்மனதில் பதிந்து தனிமனித நடத்தை மாற்றங்களை ஏற்படுத்துகின்ற ஒழுக்கவியல் சார் வழிகாட்டல்கள் அவசியமாக உள்ளன. இதனை சமய வழிகாட்டல்களின் துணையுடன் மேற்கொள்ளக்கூடியதாக இருப்பது சாதகமானதொரு அம்சமாக உள்ளது. எவ்வாறாயினும் சூழலியல் பிரச்சினைகளின் தாக்கத்தினை விஞ்ஞானரீதியாக புரிந்துகொண்டு அதனை எதிர்கொள்வதற்கு ஆன்மீகத்தெளிவுடன் கூடிய வழிமுறைகளை பின்பற்றுவது ஆகச்சிறந்த விளைவுகளை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தும். இவற்றில் ஒவ்வொருவரும் இப் பிரபஞ்சத்தில் தான் யார்? என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்ன? இப் பிரபஞ்சத்திற்கு தன்னுடைய கடமை என்ன? இயற்கையின் உருவாக்கமாக உள்ள நான் இறுதியில் என்னவாக மாறுகின்றேன்? முதலான வினாக்களுக்கான விடையினை கண்டறியும் முயற்சியும் ஒருவர் இயற்கையுடன் இசைந்த வாழ்க்கையினை அமைத்துக்கொள்வதற்குரிய மாற்றத்தை உணர்வு, சிந்தனை, நடத்தை என அனைத்து கோணங்களிலும் ஏற்படுத்துவதாக இருக்கும்.

இம் மாற்றங்கள் ஊடாக மனிதர்கள் தாங்கள் இயற்கையின் ஒரு அங்கம் என்பதனை உணர்ந்துகொண்டு பிரபஞ்சத்தின் அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அகிம்சையினை பின்பற்றுதல், லௌகீக துய்ப்புக்களை குறைத்துக்கொண்டு குறைந்தளவு வளப்பயன்பாட்டுடன் வாழ்தல், எல்லையற்ற நுகர்வுக்கலாச்சாரத்தில் இருந்து விடுபடுதல், இயற்கையுடன் இசைவாக வாழ்தல், பிரபஞ்ச அன்பினை பேணுதல் முதலானவை பின்பற்றப்பட வேண்டியவையாக உள்ளன. இதற்கான வழிகாட்டல்களை இந்து சமயம் உள்ளடக்கியுள்ளது. இவ்விடயங்களை கருத்தில்கொண்டு பல்வேறு செயற்பாடுகள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினாலும், தேசிய, சர்வதேசிய அரசுகளினாலும் அபிவிருத்தித் திட்ட ஆலோசனைகள் மற்றும் செயற்பாடுகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதில் இயற்கையுடன் இசைந்த இந்து வாழ்வியலின் முழுமையான நன்மைகள் பற்றி ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும், சமயவழிகாட்டல்கள் அபிவிருத்தி திட்டங்களின் உள்ளார்ந்த கூறுகளாக அமைந்திருத்தல்

வேண்டும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு சமயநிறுவனங்கள், சமயத்தலைவர்களது தலைமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், இயற்கை பாதுகாப்புக்கும் நிலைபேறான அபிவிருத்திக்குமான முயற்சிகள் சமயநிறுவனங்கள் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான கருவிகளாக அல்லாமல் தம்மளவில் கொண்டுள்ள வளங்களின் அடிப்படையில் செயற்படுவதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும், சூழல்பாதுகாப்புச் செயற்பாட்டாளர்கள் தங்களது செயற்பாடுகளில் சமயபெறுமானங்களை அறிந்து பின்பற்றச் செய்வதற்குரிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அதுபோல சனத்தொகை குறைவாக இருந்த காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட இந்து சமய சடங்கு ஆச்சாரங்கள் பல தற்போது பொருத்தமற்றவையாக உள்ள நிலையில் அவை ஏற்படுத்துகின்ற சூழலியல் பாதிப்புக்களை கருத்தில் கொண்டு திருத்தியமைக்கப்பட வேண்டியவையாகவும் உள்ளன.

**உசாத்துணைகள்**

Anikeeva. E. (2018). Conceptualization of Nature in Classical Indian Philosophy Ecological Issues. *Advance in Social Science, Education and Humanities Research: Vol 283.* Russia: Atlantic Press

Awasthi, A. (2021). A Reinterpretation of Hindu Spirituality for Addressing Environmental Problems. *Religions 2021* 12: 358. https://doi.org/10.3390/rel12050358

Baumard, N., Hyafil, A., Morris, I., & Boyer, P. (2015). Increased affluence explains the emergence of ascetic wisdoms and moralizing religions. *Current biology: CB*, *25*(1), pp. 10–15. https://doi.org/10.1016/j.cub.2014.10.063

Bloomfield, M. (1908). *The Religion of the Veda – The Ancient Religion of India.* USA: G.P.Putnam's Sons

Beggiora, S. (2021). General Introduction to Environmental Humanities in India: The Ecocritical Discourse in Hindu Literature. *Lagoonscapes. The Venice Journal of Environmental Humanities*, 1(2), 199-218. https://doi.org/10.30687/LGSP//2021/02/004

DESA – Department of Economic and Social Affairs. (2019). Agenda for Sustainable Development Goals 2015 – 2030. USA: United Nations Publication

Dwivedi, O. P. (2000). Hinduism and Ecology, edit. Christopher Key Chappel and Mary Evelyn Tucker, USA: Harvard University Press

Enkins, Willis, Evan Berry, and Luke Beck Kreider. 2018. Religion and Climate Change. *Annual Review of Environment and Resources*, Vol. 43:85-108 – https://doi.org/10.1146/annurev-environ-102017-025855

Ferry, M. (2020). What's India's Beef with Meat Hindu Orthopraxis and Food Transition in India Since the 1980. *Sociological forum 2020.1-24* https://doi.org/10.1111/socf.12592

Guggenberger,W. (2021). Gandhi and Sustainability. An Attempt to Update Timeless Ideas. *Religions* 12: 753. https://doi.org/10.3390/rel12090753

Narayanan, V. (1997). "One Tree Is Equal to Ten Sons": Hindu Responses to the Problems of Ecology, Population, and Consumption. *Journal of the American Academy of Religion*, *65*(2), 291–332. http://www.jstor.org/stable/1465767

Rabindrakumar. S. (1985). *Vaishnavism through the Ages*. India: Siddhantashastree Munshiram Manoharlal Publishers Pvt. Ltd

Ravikanth. G. (2021). Indian Philosophy and Environmental Ethics. *GNOSI: An Interdisciplinary Journal of Human Theory and Praxis.* Vol. 5, Iss. I, 2021. Pp. 47-63, Retrieved from https://gnosijournal.com/index.php/gnosi/article/view/10

Renugadevi. R. (2012). Environmental Ethics in the Hindu Vedas and Puranas in India. *African Journal of History and Culture: Vol. 4(1)*, pp.1-3. https://doi.org/10.5897/AJHC11.042

Shamasastry. R. (1905). *Koutilya's Arthashastra.* Online version - http://www.zoroastrian.org.uk/scripture/indian/arthashastra/index.html

Taback, H., & Ramanan. R. (2014). *Environmental Ethics and Sustainability – A Casebook for Environmental Professionals.* USA: CRC Press

Tiwari. R.R. (2019). Gandhi as an Environmentalist. *Indian Journal of Medical Research, 2019.* PP 141-143. https://doi:10/4103/0971-5916.251671